ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ரு’தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ பொன்னுலகு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பொன்னுலகு ॥

திருநாடு முதலியவற்றில் தலைமகள் பறவைகளைத் தூதுவிடல்

‡பொன்னுலகாளீரோ⋆ புவனி முழுதாளீரோ⋆
நன்னலப் புள்ளினங்காள்!⋆ வினையாட்டியேன் நான் இரந்தேன்⋆
முன்னுலகங்கள் எல்லாம் படைத்த⋆ முகில்வண்ணன் கண்ணன்⋆
என் நலம் கொண்ட பிரான் தனக்கு⋆ என் நிலைமை உரைத்தே (1)

மையமர் வாள் நெடுங்கண்⋆ மங்கைமார் முன்பென் கையிருந்து⋆
நெய்யமர் இன்னடிசில்⋆ நிச்சல் பாலோடு மேவீரோ⋆
கையமர் சக்கரத்து⋆ என் கனிவாய்ப் பெருமானைக் கண்டு⋆
மெய்யமர் காதல் சொல்லிக்⋆ கிளிகாள்! விரைந்தோடி வந்தே (2)

ஓடிவந்தென் குழல்மேல்⋆ ஒளி மா மலர் ஊதீரோ⋆
கூடிய வண்டினங்காள்!⋆ குருநாடுடை ஐவர்கட்காய்⋆
ஆடிய மா நெடும் தேர்ப்படை⋆ நீறெழ செற்ற பிரான்⋆
சூடிய தண் துளவம் உண்ட⋆ தூ மது வாய்கள் கொண்டே (3)

தூ மது வாய்கள் கொண்டுவந்து⋆ என் முல்லைகள்மேல் தும்பிகாள்⋆
பூ மதுவுண்ணச் செல்லில்⋆ வினையேனைப் பொய்செய்தகன்ற⋆
மா மதுவார் தண்டுழாய்முடி⋆ வானவர் கோனைக் கண்டு⋆
யாம் இதுவோ தக்கவாறு⋆ என்னவேண்டுங்கண்டீர் நுங்கட்கே (4)

நுங்கட்கு யான் உரைக்கேன் வம்மின்⋆ யான் வளர்த்த கிளிகாள்⋆
வெங்கண் புள்ளூர்ந்து வந்து⋆ வினையேனை நெஞ்சம் கவர்ந்த⋆
செங்கண் கருமுகிலைச்⋆ செய்ய வாய்ச் செழுங்கற்பகத்தை⋆
எங்குச் சென்றாகிலும் கண்டு⋆ இதுவோ தக்கவாறென்மினே (5)

என் மின்னு நூல் மார்வன்⋆ என் கரும் பெருமான் என் கண்ணன்⋆
தன் மன்னு நீள் கழல்மேல் தண்டுழாய்⋆ நமக்கன்றி நல்கான்⋆
கன்மின்கள் என்றும்மை யான்⋆ கற்பியாவைத்த மாற்றம் சொல்லி⋆
சென்மின்கள் தீவினையேன்⋆ வளர்த்த சிறு பூவைகளே (6)

www.prapatti.com

பூவைகள் போல் நிறத்தன்⋆ புண்டரீகங்கள் போலும் கண்ணன்⋆
யாவையும் யாவருமாய்⋆ நின்ற மாயன் என்னாழி பிரான்⋆
மாவை வல் வாய் பிளந்த⋆ மதுசூதற்கென் மாற்றம் சொல்லி⋆
பாவைகள்! தீர்க்கிற்றிரே⋆ வினையாட்டியேன் பாசறவே (7)

பாசறவெய்தி இன்னே⋆ வினையேன் எனை ஊழி நைவேன்⋆
ஆசறு தூவி வெள்ளைக் குருகே!⋆ அருள் செய்தொருநாள்⋆
மாசறு நீலச் சுடர் முடி⋆ வானவர் கோனைக் கண்டு⋆
ஏசறும் நும்மை அல்லால்⋆ மறுநோக்கிலள் பேர்த்துமற்றே (8)

பேர்த்து மற்றோர் களைகண்⋆ வினையாட்டியேன் நானொன்றிலேன்⋆
நீர்த் திரைமேல் உலவி⋆ இரை தேரும் புதாவினங்காள்⋆
கார்த் திரள் மா முகில் போல்⋆ கண்ணன் விண்ணவர் கோனைக் கண்டு⋆
வார்த்தைகள் கொண்டருளி உரையீர்⋆ வைகல் வந்திருந்தே (9)

வந்திருந்தும்முடைய⋆ மணிச் சேவலும் நீரும் எல்லாம்⋆
அந்தரம் ஒன்றும் இன்றி⋆ அலர்மேல் அசையும் அன்னங்காள்⋆
என் திரு மார்வற்கென்னை⋆ இன்னவாறிவள் காண்மின் என்று⋆
மந்திரத்தொன்றுணர்த்தி உரையீர்⋆ மறு மாற்றங்களே (10)

‡மாற்றங்கள் ஆய்ந்து கொண்டு⋆ மதுசூத பிரான் அடிமேல்⋆
நாற்றங்கொள் பூம் பொழில் சூழ்⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
தோற்றங்கள் ஆயிரத்துள்⋆ இவையும் ஒரு பத்தும் வல்லார்⋆
ஊற்றின்கண் நுண் மணல் போல்⋆ உருகாநிற்பர் நீராயே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com